# ஸ்ரீ பால சுபிக்ஷம்

## இராமசுப்ரமணியன்



ஸ்ரீ பா ல சு பி க் ஷ ம் இராமசுப்ரமணியன்

# மதுரை

ஸ்ரீ பா ல சு பி க் ஷ ம் இராமசுப்ரமணியன்

# மதுரை




ஸ்ரீ பா ல சு பி க் ஷ ம் இராமசுப்ரமணியன்

# மதுரை

V. பிரஸன்னு

அன்பளிப்பு - பத்ரிநாத்
(9.12.94)

ஸ்ரீ பால சுபிக்ஷம் இராமசுப்ரமணியன்

வெளியிடுவோர் :

ஹரிகுமரி ஆர்ட்ஸ்

கன்னியாகுமரி

Rights Reserved]

PRICE Rs. 3.00

# மதுரை

திருவிருந்து தமிழ் வளர்த்த மதுரை தென் பாண்டி நாட்டின் தலைநகர். வைகைக் கரையிலே அமைந்த வளநகர். இறைவன் அங்கயற்கண்ணி யுடன் கோயில் கொண்டுள்ள எழில் நகர். சமயக் குரவர் நால்வரும் பதிகம் பாடிப் போற்றிய புண்ணிய நகர்.

மதுரை மாநகர்

தமிழ்ச் சங்கங்களின் இருப்பிடமான மதுரை ஐந்து நிருத்த சபைகளில் ஒன்ருன வெள்ளியம்பலம். சக்தியே பாண்டியன் மகளாய்ப் பிறந்து, அரியணை ஏறி ஆட்சி புரிந்து, இறைவனை மணந்த இடம் இது. இறைவன் இங்கே தன் அன்பர்க்காக அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் நிகழ்த்தியிருக்கிருன்.

மதுரையின் புகழ் மணக்கும் பண்டைத் தமிழ் நூற்கள்பல. பரிபாடல் மதுரையைத் தாமரை மலராக—கோயிலைப் பொகுட்டாகவும், சுற்றியமைந்த வீதிகளை மலரின் இதழ்களாகவும்—வர்ணிக்கிறது.

மதுரையின் மங்காப் புகழுக்குக் காரணமாய் நிற்கும் அங்கயற்கண்ணியின் பெருங் கோயில் தமிழரின் கட்டிட, சிற்பக் கலைத் திறனுக்கோர் உன்னதமான எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மேலக்கோபுரமும் சுவாமி கோயில் விமானமும்

இயற்கையின் அழகிய பின்னணியில் விண்ணளாவி நிற்கும் பெருங் கோபுரங்கள் இருகல் தொலைவினின்றே நம்மை வரவேற்கின்றன. கோயில், நகரின் நடுநாயகமாக அமைந்துள்ளது. மதுரைக் கோயிலில் அன்னை மீனாட்சிக்கே முதலில் வழிபாடு நடைபெறுகிறது. எனவே கோயிலுக்குச் செல்பவர்கள் கிழக்கு வீதியிலமைந்த அம்மன் சன்னிதி வாயில் வழியாக உள்ளே செல்வது வழக்கம்.

## அஷ்டசக்தி மண்டபம்

அம்மன் கோயிலின் முன்பகுதி அஷ்டசக்தி மண்டபம். வாயிலில் விநாயகர், முருகன் உருவங்களிடையே மீனாட்சி கல்யாணம் சுதை வடிவில் காட்சியளிக்கிறது. உள்ளே அமைந்த எட்டு பெருந்தூண்களையும் அஷ்டசக்திகளின் சிலைகள் அழகு செய்கின்றன. திருவிளையாடற்புராணக் காட்சிகள் நிறைந்த இம்மண்டபத்தில் மீனாட்சி, சமயக்குரவர், துவாரபாலகர், விநாயகர், சுப்ரமணியர் சிலைகளும் உள்ளன.

## மீனாட்சி நாயக்கன் மண்டபம்

அஷ்டசக்தி மண்டபத்திலிருந்து மீனாட்சி நாயக்கன் மண்டபத்தை அடையலாம். மேலே யாளியும் கீழே சிறு சிற்பங்களும் நிறைந்த ஆறு வரிசைத் தூண்கள் இம்மண்டபத்தை அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தையும் அஷ்டசக்தி மண்டபத்தையும் இணைக்கும் ஒரு சிறு மண்டபத்தில் வேடன், வேட்டுவச்சி சிலைகள் காணப்படுகின்றன. மீனாட்சி நாயக்கன் மண்டபத்தின் மேற்குக் கோடியில் ஆயிரத்தெட்டு சிறு விளக்குகளைக் கொண்ட பித்தளையாலான திருவாட்சி கண்களைக் கவரும் அமைப்புடையது.

பொற்றாமரைக் குளம்

## முதலிப் பிள்ளை மண்டபம்

மீனாட்சி நாயக்கன் மண்டபத்தை அடுத்துள்ளது இருட்டு மண்டபம் என்று அழைக்கப்படும் முதலிப்பிள்ளை மண்டபம். இங்குள்ள பிட்சாடனர், அவர் அழகில் மயங்கி நிற்கும் தாருகாவன முனி பத்தினியர், மோகினி, விநாயகர், முருகன், மற்றும் இம்மண்டபத்தைக் கட்டிய கடந்தை முதலியார் ஆகியோர் சிற்பங்கள் கலையழகு மிக்கவை.

## பொற்றாமரைக் குளம்

முதலிப் பிள்ளை மண்டபத்தைக் கடந்து, இந்திரன் பூஜைக்கு பொன்மலர் பறித்ததாகக் கூறப்படும் பொற்றாமரைக் குளத்திற்கு வருகிறோம். திருக்குறள் இங்குவைத்துத்தான் சங்கத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பர். பொற்றாமரைக் குளம் நீண்ட சதுர வடிவில், அழகிய படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளது. வடக்குக் கரையிலுள்ள தூண்களில் சங்கப் புலவர்கள் 24 பேர்களின் சிலைகளைக் காணலாம். இரு தூண்களில், இக்கோயிலை முதன் முதலில் கண்ட தனஞ்சயன் எனும் வணிகனும், கோயிலையும் நகரையும் அமைத்த குலசேகர பாண்டியனும் காட்சியளிக்கின்றனர். சுவர்களில் திருவிளையாடற் புராணக் காட்சிகள் வர்ணப்படங்களாகத் தீட்டப்பட்டிருக்கின்றன. கிழக்குக் கரையில் நின்று பார்த்தால் சுவாமி, அம்மன் கோயில்களின் தங்க விமானங்களைத் தரிசிக்கலாம். தெற்குக் கரை மண்டபத்தில் திருக்குறள் முழுவதும் வெண்சலவைக் கற்களில் செதுக்கி சுவரில் பதிக்கப் பெற்றுள்ளது.

## ஊஞ்சல் மண்டபம்

பொற்றாமரைக் குளத்தின் மேற்குப் பக்கம் ஊஞ்சல் மண்டபம் இருக்கிறது. இங்கு சலவைக் கல் தூண்கள் கொண்ட ஊஞ்சல் மேடையும், உயரே விட்டங்களில் முருகனின் அறுபடைவீடு சித்திரங்களும் உள்ளன. குளக்கரையை அடுத்துள்ள நிலைமாடத்தில் இராணி மங்கம்மா, அமைச்சர் இராமப்பய்யன் ஆகியோர் உருவங்களைக் காணலாம்.

## கிளிக்கூட்டு மண்டபம்

ஊஞ்சல் மண்டபத்தை அடுத்துள்ள கிளிக் கூட்டு மண்டபத்தில் பஞ்சபாண்டவர், வாலி, சுக்ரீவன், புருஷாமிருகம், திரௌபதி முதலிய அழகிய சிற்பங்களைப் பார்க்கலாம். மண்டபத்தின்

கிளிக்கூட்டு மண்டபம்

மேல் விதானத்தில் விநாயகர், முருகன், சிவ பெருமான் முதலியோரின் பல்வேறு தோற்றங்கள் வர்ணச் சித்திரங்களாக மிளிர்கின்றன. அம்மன் சன்னதிக்கு நேராக மீனாட்சியின் திருக்கல்யாணம், முடிசூட்டும் கோலம் ஆகிய இருபெரும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

## அம்மன் கோயில்

கிளிக்கூட்டு மண்டபத்திலிருந்து வேம்பத்தூரார் கோபுர வாயில் வழி அம்மன் சன்னதிக்குச் செல்லலாம். அம்மன் கோயிலுக்கு இரு பிராகாரங்கள் உள்ளன. இரண்டாம் பிராகாரத்தில் தங்கக் கொடிமரம், திருமலை நாயக்கர் மண்டபம், விநாயகர் கூடற்குமரர் சன்னிதிகள், செம்பாலான இருபெரும் துவாரபாலகர்கள் ஆகியவை இருக்கின்றன. கூடற் குமரர் சன்னிதியில் அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள் செதுக்கப்பட்டுள்ளன. இப்பிராகாரத் திலுள்ள ஆறுகால் பீடத்தில்தான் குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றப்பட்டது. இதன் வாயில்வழி உள்ளே அம்மன் கோயில் மகா மண்டபத்தை அடையலாம். இதுவே முதல் பிராகாரம். இங்கு ஐராவத விநாயகர், முத்துக்குமரர் சன்னிதிகளும், பள்ளியறையும் உள்ளன. மேற்கே அர்த்த மண்டபத்தையும், கருவறையையும் காணலாம். கருவறையில், கையில் கிளியுடன் செண்டேந்தி நிற்கும் மீனாட்சியைத் தரிசிக்கிறோம். கருணை பொழியும் கண்களுடன், அகிலமெல்லாம் அருள் பாலிக்கும் அன்னை அங்கயற்கண்ணியை வணங்கி அவள் அருள் பெற்றுய்வோம்.

## முக்குறுணி விநாயகர்

அன்னையை வணங்கியபின் சுவாமிகோயிலுக்குச் செல்வோம். கிளிக்கூட்டு மண்டபம் வழியாக நடுக்கட்டுக் கோபுர வாயிலைக் கடந்து செல்லும்போது நம்மை எதிர் நோக்கியிருப்பவர் முக்குறுணி விநாயகர். எட்டு அடி உயரமுள்ள இவ்விநாயகர், திருமலை நாயக்கர் வண்டியூர் தெப்பக்குளம் வெட்டுகையில் அங்கே கண்டெடுக்கப்பட்டவர் என்பர்.

சுவாமி கோயிலின இரண்டாம் பிராகாரத்தில் சங்கப் புலவர், ஞானசம்பந்தர் கோயில்கள் இருக்கின்றன. மண்டப நாயக மண்டபத்தில் நடராஜர் சிலையைக் காணலாம். இப்பிராகாரத்திலேயே சுவாமி சன்னிதிக்கெதிரே கம்பத்தடி மண்டபம் இருக்கிறது.

## கம்பத்தடி மண்டபம்

அற்புதமான சிற்பங்கள் பலவற்றைத் தாங்கி, சிற்பக் கலைக்கே ஒரு சீரிய எடுத்துக் காட்டாய் விளங்கி, காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது கம்பத்தடி மண்டபம். மண்டபத்தின் நடுவே நந்தியும் பலிபீடமும் தங்கக் கொடிமரமும் உள்ளன. சுற்றியுள்ள எட்டுத்தூண்களும் ஈடு இணையற்ற அழகிய சிலைகளைத் தாங்கி நிற்கின்றன. முப்புரம் எரித்த சிவன், சோமஸ்கந்தர், அர்த்தநாரீஸ்வரர் போன்ற சிவபெருமானின் பல்வேறு தோற்றங்கள்; திருமாலின் தசாவதாரக் காட்சிகள் முதலிய சிற்பங்களைக் கண்ணிமைக்காது கண்டு மகிழலாம். இவையாவினும்




லிங்கோத்பவர் - ரிஷப அந்திகர்




ருத்திரர் - பிட்சாடனர்

சிறந்த சிற்பம் மீனாட்சி சுந்தரேசர் திருமணத்தைச் சித்தரிப்பதாகும். அழகிலும் அமைப்பிலும் முக பாவத்திலும் இதற்கு இணையான ஒரு சிற்பத்தைக் காண்பதரிது. மீனாட்சியின் வதனத்தில் காணும் மகிழ்ச்சி, நாணம், மலர்ச்சி; சுந்தரர் முகத்தில் தோன்றும் மிடுக்கு, ஆண்மை, கம்பீரம்—இவற்றை யெல்லாம் கல்லில் எவ்வாறு சமைக்க முடிந்தது என நினைத்து நினைத்து வியந்து பாராட்டத் தோன்றும்.

கம்பத்தடி மண்டபத்தை அடுத்து இரு தூண்களில் அக்கினி வீரபத்திரர், அஃகோர வீரபத்திரர் சிலைகளும், மற்றிரு தூண்களில் ஊர்த்துவ தாண்டவர், காளி இவர்களின் உருவங்களும் காட்சியளிக்கின்றன.

கம்பத்தடி மண்டபம்

நடராஜரின் இரு தோற்றங்கள்

## சுவாமி சன்னிதி

சுவாமி சன்னிதிக்குச் செல்லும் வாயிலில் இரு புறமும் 12 அடி உயரமுள்ள துவாரபாலகர்கள் நிற்கின்றனர். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் ஆகியோரின் சிறு உருவங்களையும் காணலாம்.

உள்ளே, முதற் பிராகாரத்தில் திருவிளையாடற் புராணம் அரங்கேற்றப்பட்ட ஆறுகால் பீடம் இருக்கிறது. அதில் செப்பாலான துவாரபாலகர் சிலைகள் இருக்கின்றன. சுற்று மண்டபத்தில் 63 நாயன்மார்களையும், கலைமகள் கோயிலையும் காண லாம். மற்றும் உற்சவ மூர்த்தி, காசிவிசுவநாதர், பிட்சாடனர், சித்தர், துர்க்கை ஆகியோர் கோயில் களும் இருக்கின்றன. ஸ்தல விருட்சமான கடம்ப மரத்தையும், கனகசபை, யாகசாலை, இரத்தினசபை, சாட்சிகூறிய வன்னி கிணறு ஆகியவற்றையும் இந்த பிராகாரத்தில் காணலாம்.

ஆறுகால் பீடத்தைக் கடந்து வெள்ளியம் பலத்தை அடையலாம். இங்கே கால்மாறியாடிய நடராஜரின் அழகிய வடிவை வணங்கியபின், கருவறைக்குச் செல்லலாம். கருவறை இந்திர விமானம் என்று அழைக்கப்படுகிறது. இவ்விமா னத்தை எட்டு யானைகளும், 32 சிங்கங்களும், 64 பூதகணங்களும் தாங்கிநிற்பதாக அமைக்கப்பட் டிருக்கிறது. கருவறையினுள்ளே லிங்க வடிவில், கற்பூரச் சொக்கர், சோமசுந்தரர், சுந்தரேஸ்வரர் என்றெல்லாம் அழைக்கப்படும் சொக்கநாதரை வணங்கி அருள் பெறலாம்.



நிருத்த கணபதி

சுவாமியை வணங்கியபின், மீண்டும் கம்பத்தடி மண்டபம் வழியாக வெளியேறி கோயிலின் மற்ற பகுதிகளுக்குச் செல்வோம்.

## ஆயிரக்கால் மண்டபம்

ஆயிரக்கால் மண்டபம் கோயிலின் மற்ற மண்டபங்களைவிட மிகப் பெரியது. வாயிலின் மேல் விதானத்தில் தமிழ் வருடம் அறுபதையும் காட்டும் சக்கரம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் முன் பகுதியிலுள்ள கண்ணப்பர், பிட்சாடனர், சந்திரமதி, குறவன், குறத்தி முதலிய சிலைகளின் அழகு கண்டு அதிசயிக்கிறோம். உள்ளே கணக்கற்ற சிற்பங்கள் நிறைந்த 985 தூண்கள் நிற்கின்றன. இத்தூண்கள் எந்த கோணத்தில் நின்று பார்த்தாலும் நேரான வரிசையில் காட்சியளிக்குமாறு அமைக்கப்பட்டிருப்பது மிக வியப்

ஆயிரக்கால் மண்டபம்

பிட்சாடனர்

குறத்தி

குறவன்

பளிக்கும். நிருத்த கணபதி, சரஸ்வதி, அர்ஜுனன், ரதி, மோகினி, மன்மதன், கலி, போன்ற இருபது அற்புத சிற்பங்களை இங்கு காணலாம். மண்டபத்தின் மறுகோடியின் நடுவே நடராஜரின் அழகிய சிலை உள்ளது.

இம் மண்டபத்தில் இப்போது கலைப் பொருட் காட்சி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. கலையழகும் தெய்வீக ஒளியும் வீசும் தெய்வங்களின் விக்ரகங்களையும், மற்றும் பல தொல்பொருட்களையும் இங்கு கண்டு மகிழலாம்.

சரஸ்வதி



தெற்குக் கோபுரம்

## மங்கையர்க்கரசி மண்டபம்

ஆயிரக்கால் மண்டபத்திற்குத் தெற்கே புதிதாக அமைக்கப்பட்டது மங்கையர்க்கரசி மண்டபம். இங்கு கூன் பாண்டியன், மங்கையர்க்கரசி, ஞான சம்பந்தர், குலச்சிறையார் ஆகியோர் உருவங்கள் இருக்கின்றன. நடுவே லிங்கம் ஒன்றும் உள்ளது.

இம் மண்டபத்தின் தென்புறம் மருது பாண்டியரால் கட்டப்பட்ட சேர்வைக்காரர் மண்டபமும், அழகிய மர விதானம் கொண்ட திருக்கல்யாண மண்டபமும் உள்ளன.

## கோபுரங்கள்

சுவாமி அம்மன் கோயில்களை வலம் வரும்படி அமைந்த முற்றம் ஆடி வீதி என அழைக்கப்படுகிறது. ஆடி வீதியில் கோயிலின் நான்கு பெரிய 9 நிலைக் கோபுரங்கள் உள்ளன. தெற்குக் கோபுரம் மற்றக் கோபுரங்களைவிட உயர்ந்தது. இதன் உயரம் 160 அடி. இதன் பக்கங்கள் சற்று வளைவாக இருப்பது தனி அழகாயிருக்கிறது. 154 அடி உயரமுள்ள மேலக் கோபுரமே மதுரைக்கு வருபவர் கண்களில் முதலில் தென்படும். வடக்குக் கோபுரத்தில் சுதைகள் குறைவாதலால் இது மொட்டைக் கோபுரம் என அழைக்கப்படுகிறது. கிழக்குக் கோபுரம் மிகப் பழமையானது. இதன் உயரம் 153 அடி.

இவை தவிர, சித்திரக் கோபுரம், வேம்பத்தூரார் கோபுரம், நடுக்கட்டுக் கோபுரம், இடபக்

குறியிட்ட கோபுரம் முதலிய பல சிறிய கோபுரங்கள் கோயிலுக்கு அழகையும் சிறப்பையும் அளிக்கின்றன.

வடக்கு ஆடி வீதியில், பெரிய கோபுரத்தை அடுத்து, ஐந்து இசைத்தூண்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 22 சிறு தூண்களைக் கொண்டது. தட்டினுல் விதவிதமான இன்னிசை எழுப்புகின்றன இந்த அதிசயத் தூண்கள்.

## புது மண்டபம்

கோயிலுக்கு வெளியே, கிழக்குக் கோபுரத்துக்கெதிரே, வசந்த மண்டபம் எனப்படும் புது மண்டபம் இருக்கிறது. தடாதகை, மீனுட்சி கல்யாணம் போன்ற அழகிய சிற்பங்களுடன், திருவிளையாடற்புராணக் கதைகளும் பல சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கல்யாணை கரும்பு தின்பதும், இராவணன் கைலையைத் தூக்குவதும் மிக அழகிய சிற்பங்கள். இம்மண்டபத்தைக் கட்டிய திருமலை நாயக்கர், மற்றும் சில மன்னர்களின் சிலைகளை இங்கே காணலாம். மண்டபத்தின் நடுவே அழகிய கருங்கல் மேடையொன்றும் இருக்கிறது.

## இராய கோபுரம்

புது மண்டபத்திற்கெதிரே ஒரு பெரிய கோபுரத்திற்கான அடித்தளம் காணப்படுகிறது. அதன் அளவைப் பார்க்கும்போது, இராய கோபுரம் என்ற இக் கோபுரம் கட்டி முடிக்கப் பெற்றிருந்தால் இந்தியாவிலேயே மிகப் பெரிய கோபுரமாக அமைந்திருக்கும் என்று தெரிகிறது.

தடாதகை

## திருமலை நாயக்கர் மகால்

மீனாட்சி கோயிலுக்குத் தென் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் திருமலை நாயக்கர் மகாலைக் காண லாம். தம் தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றிய திருமலை நாயக்கர் 1634-65-ல் இதைக் கட்டினார். இது செங்கல், வெண்சுதைச் சாந்தால் மரம் உத்தரம் சம்பந்தமில்லாது கட்டப்பட்டது.

## மாரியம்மன் தெப்பக்குளம்

மதுரை நகரின் எல்லையில் அமைந்துள்ள பெரிய தெப்பக்குளத்தை வண்டியூர் தெப்பக்குளம் என்றும் அழைக்கின்றனர். 1000 அடி நீளமும் 950 அடி அகலமும் உள்ள இக்குளத்தின் மத்தியில் ஒரு நடு மண்டபமும், நான்கு சிறு மண்டபங்களும் இருக் கின்றன. தைப்பூச நாளன்று இங்கே நடைபெறும் தெப்பத்திருவிழா ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

மாரியம்மன் தெப்பக்குளம்



# அழகர் கோயில்

மதுரைக்கு கிழக்கில் 19 கி. மீ. தொலைவிலுள்ள திருமாலிருஞ்சோலையில், மரங்களும் சோலைகளும் அழகு செய்யும் அமைதியான மலைச் சாரலில் கோயில் கொண்டுள்ளார் அழகர். இங்குள்ள உற்சவ மூர்த்தியே அழகர்மலை அழகனுன சுந்தர ராஜன். இவருக்கு மலையின்மேல் மூன்று கி. மீ. தொலைவிலிருக்கும் நூபுரகங்கையின் நீரால்தான் அபிஷேகம் செய்யவேண்டும். வேறு நீரால் அபிஷேகம் செய்தால் கறுப்பாக மாறிவிடுகிருர். சித்திரா பௌர்ணமியன்று அழகர் வைகையாற்றில் இறங்குவது ஒரு பெரிய திருவிழாவாகும்.

அழகர் கோயிலுக்கு உயரே மலையில், அறுபடை வீடுகளில் ஒன்றுன பழமுதிர் சோலையில், முருகனைத் தரிசிக்கலாம்.

அழகர் கோவில்



# திருப்பரங்குன்றம்

மதுரையிலிருந்து தெற்கே 10 கி. மீ. தொலைவிலுள்ள திருப்பரங்குன்றத்தில் கோயில் கொண்டுள்ளான் குமரன். நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடியது இங்கேதான். இது அறுபடை வீடுகளில் ஒன்று. சூரனை வதைத்து, தேவர்களை சிறைமீட்டு, இந்திரன் மகளான தெய்வயானையை திருமணம் செய்து கொண்ட முருகன் இங்கு மணக்கோலத்தில் காட்சி அளிக்கிறான். இது ஒரு குடைவரைக் கோயில். லிங்க வடிவிலுள்ள பரங்கிரி நாதரே மூலவர்; ஆயினும் கோயிலில் முதலிடம் முருகனுக்கே. விநாயகர், விஷ்ணு, துர்க்கை, சனிபகவான் முதலியவர்க்கும் இங்கு கோயில்கள் உள்ளன. கோயிலின் முகப்பு மண்டபத்தில் சிற்பங்கள் நிறைந்த 48 பெருந்தூண்கள் நிற்கின்றன.

திருப்பரங்குன்றம்



திருப்பரங்குன்றம் முருகன்

# புராணக் கதைகள்

## இந்திரன் தீவினை தீர்நல்

ஒரு சமயம் இந்திரன் தன்னைப் பிடித்த பிரம்ம ஹத்தி தோஷம் நீங்குவதற்காக தல யாத்திரை செய்து கொண்டிருந்தான். பாண்டி நாட்டுக் கடம்பக் காட்டிலிருந்த ஒரு லிங்கத்தை வழி பட்டதும் அவன் தீவினை நீங்கியது. மகிழ்ச்சியுற்ற இந்திரன் அந்த லிங்கத்தின் உயரே ஒரு விமா னத்தை அமைத்துச் சென்றான். அன்று முதல் அங்கு தேவபூஜை நடைபெற்று வந்தது. பல ஆண்டுகளுக்குப் பின் தனஞ்சயன் எனும் வணிகன் இரவில் அந்த கோயிலில் தங்கினான். அப்போது அங்கு பூஜை நடந்துவருவது கண்டு வியப்புற்று, மணவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த குலசேகரபாண்டியனிடம் கூற, அரசன் கடம்பவனம் சென்று இறைவனை வழி பட்டான். பின்னர் இறைவன் கட்டளைப்படியே கோயிலையும் மதுரை நகரையும் அமைத்தான்.

## தடாதகை

மதுரையை ஆண்ட மலயத்துவஜ பாண்டி யனும் அவன் மனைவி காஞ்சன மாலையும் மகப்பேறு வேண்டி யாகம் செய்தனர். வேள்வியினின்று உமா தேவி மூன்று தனங்களுடைய பெண் குழந்தை யாகத் தோன்றினாள். குழந்தையின் உருவம் கண்டு கலங்கிய மன்னன், "அவள் தனக்கேற்ற கண வனைக் காணும் போது ஒரு தனம் மறையும்" என்ற அசரீரி வாக்கு கேட்டு மனம் அமைதியுற்றான். குழந்தைக்கு தடாதகை எனப் பெயரிட்டு, அருங் கலைகள் யாவும் கற்பித்து வளர்த்து வந்தான்.

தடாதகை மலயத்துவஜனுக்குப் பின் அரியணை ஏறினாள். போர்க்கலையில் தேர்ச்சி பெற்ற தடாதகை நாற்றிசையும் வென்று, சிவபெருமானுடன் போரிட கைலையை அடைந்தாள். அங்கு இறைவனைக் கண்டதும் அவள் மூன்றும் தனம் மறைய, அவரே தன் கணவன் என உணர்ந்து மகிழ்ந்தாள். இறைவனும் மதுரை வந்து, தடாதகையை மணம் புரிந்து சௌந்தரபாண்டியன் எனும் பெயருடன் அரியணை அமர்ந்து ஆட்சி புரிந்தான். பின்னர் முருகன் அவதாரமான உக்கிரபாண்டியனுக்கு முடிசூட்டி விட்டு, கோயில் சென்று, மீனாட்சி சுந்தரேசராக இறைவடிவாயினர்.

## ஸ்ரீ பாலசுபிக்ஷம் இராமசுப்ரமணியன்

## கோயில் வரலாறு

மதுரை கோயிலின் மிகப் புராதனமான பகுதி சுவாமி கோயிலும் இந்திர விமானமுமே. மதுரை நகரமும் கோயிலும் 3600 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கருதப்படுகிறது. ஏழாம் நூற்றாண்டில் சுவாமி கோயிலும் உட்பிராகாரமும் மட்டுமே இருந்ததாக திருஞானசம்பந்தர் பாடல் ஒன்றால் அறியலாம். அன்னை மீனாட்சிக்குத் தனியாக கோயில் அமைத்தது 12-ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்று தெரிகிறது.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கோயிலைச் சுற்றி மதில்கள் அமைத்து கிழக்குக் கோபுரத்தையும் கட்டினான். மேலக் கோபுரம் 14-ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டது. சில சிறு கோபுரங்களும் இக் காலத்தில் தோன்றின. 16-ஆம் நூற்றாண்டில் செவ்வந்தி செட்டியார் தெற்குக் கோபுரத்

## Sri Meenakshi Temple

Timings: 5 a.m. to 1 p.m.
4 p.m. to 10 p.m.

Photography inside the Temple is allowed between 1 p.m. and 4 p.m. on payment of a fee of Rupees Five. Please enquire at the office within the Temple for details.

## Temple Art Museum

Exhibited, within the precincts of Sri Meenakshi Temple, in the Thousand Pillared Hall. Entrance fee: 50 paise per person. Charges for photography: Rs. Five.

Timings: 8 a.m. to 8 p.m.

ஸ்ரீ பா ல சு பி க் ஷ ம் இராமசுப்ரமணியன்

## Thirumalai Naick Mahal

Timings: 9 a.m. to 12 noon.
1 p.m. to 4 p.m.

A "Light & Sound" show is held daily at the Mahal, in English and Tamil.

English: 6.45 p.m. to 7.45 p.m.
Tamil : 8.00 p.m. to 9.00 p.m.

Admission by tickets, available at the Mahal.

தையும், கிருஷ்ணவீரப்ப நாயக்கர் வடக்குக் கோபுரத்தையும் கொடி மண்டபத்தையும் கட்டினர். அரியநாத முதலியார் ஆயிரக்கால் மண்டபத்தை அமைத்தார். 17–ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த திருமலை நாயக்கர் புதுமண்டபத்தையும், அவர் மனைவியர் அஷ்டசக்தி மண்டபத்தையும் கட்டினர். வண்டியூர் தெப்பக்குளமும், கிளிக்கூட்டு மண்டபமும் இக்காலத்திலேயே தோன்றின. ஆடிவீதி சுற்று மண்டபங்கள் இராணி மங்கம்மாளால் கட்டப்பட்டன. இவ்வாறு கி பி. 12 முதல் 18-ஆம் நூற்றாண்டுகளுக்கிடையே சுமார் 600 ஆண்டுகளில் கோயிலின் அமைப்பு முழுமை பெற்றது.

மதுரை கோயிலை மன்னர்களும், செல்வர்களும், வணிகர்களும் அவ்வப்போது திருப்பணிகள் செய்து அழகுபடுத்தியுள்ளனர். 1877-ல் ஏழுகோயில் நகரத்தார் ஒரு பெருந்திருப்பணி நடத்தினர். இத்திருப்பணியின் போது கம்பத்தடி மண்டபத்திலுள்ள அற்புத சிற்பங்கள் தாங்கிய எட்டுத் தூண்களைக் கட்டி முடித்ததோடு, மொட்டை கோபுரத்தையும் செப்பனிட்டனர். இருபதாம் நூற்றாண்டிலும் ஒரு மாபெரும் திருப்பணி நடைபெற்றது. 1960–63-ல் தமிழவேள் திரு பி. டி இராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இத்திருப்பணியில் கோபுரங்கள் யாவும் புதுப்பிக்கப்பட்டு, சுதைகளும் சிலைகளும் வர்ணந்தீட்டப்பட்டன. மங்கிய சித்திரங்கள் புதுப்பொலிவுற்றன. கோயில் புத்தழகு பெற்றது. புதிதாகக் கட்டப்பட்ட மங்கையர்க்கரசி மண்டபம் இத்திருப்பணியின் சிறப்புக்கோர் அழகிய சின்னமாகத் திகழ்கிறது.

**ஸ்ரீ பால சுபிக்ஷம் இராமசுப்ரமணியன்**

## திருவிழாக்கள்

மதுரையில் மாதந்தோறும் திருவிழாக்கள் நடந்து கொண்டேயிருக்கும். இறைவன் நடத்திய திருவிளையாடல்கள் யாவும் திருவிழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. விழாக்காலங்களில் அர்ச்சகர்கள் திருவிளையாடல்களை நடத்திக் காட்டுவர். சித்திரை, ஆவணி, தை மாத திருவிழாக்கள் சிறப்பானவை. சித்திரா பௌர்ணமியன்று நடைபெறும் மீனாட்சி கல்யாணமும், அழகர் வைகையாற்றில் இறங்கும் அற்புதக் கோலமும் கண் கொள்ளாக் காட்சிகளாகும்.

## கோயில் மாநகர்

அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் முதற் பீடமாக விளங்குவது மதுரை. மேனாட்டவரும் கண்டு வியக்குமாறு நகரின் அமைப்பு அமைந்துள்ளது. திருமலை நாயக்கர் மகாலும், காந்திமியூசியமும், வைகை நதியும், வண்டியூர் தெப்பக்குளமும் ஊருக்கு எழில் கூட்டுவன. வானளாவிய கோபுரங்களையும், காவியங்கள் பல கூறும் சிற்பங்களையும் கொண்ட அங்கயற்கண்ணியின் ஆலயம் பாண்டிய மன்னர்கள் தமிழகத்திற்கு அளித்த ஒப்பற்ற பரிசு. அழகு பொலியும் இவ்வாலயத்தைத் தன்னகத்தே கொண்டு, தரணியெல்லாம் வியக்க, பெருமை பெற்று விளங்குகிறது இக் கோயில் மாநகர்.

**Sole Distributors:**
M/s. Siva Product

Madurai 9
ShriBalaSubiksham Ramadubramanian
Printed by: SRINIVAS INDUSTRIES, SIVAKASI.

ஸ்ரீ பா ல சு பி க் ஷ ம் இராமசுப்ரமணியன்

Car Festival Madurai

ஸ்ரீ பால சுபிக்ஷம் இராமசுப்ரமணியன்

HARI KUMARI ARTS
Kanyakumari